**இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு**

# இலங்கைத் தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் ஓட்டுனர் பதவி வெற்றிடத்திற்கான ஆட்சேர்ப்பு

இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஓட்டுனர் பதவியின் வெற்றிடத்திற்கு குறித்த தகைமையுடையோர் விண்ணப்பிக்கலாம்.

**(1) தகுதிகள் :**

**கல்வி / தொழிற் தகைமைகள் / அனுபவம்**

**கல்வி தமமைகள் :**

- க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு குறையாத அமர்வுகளில் சிங்களம் மற்றும் தமிழ் மொழி உட்பட இரண்டு திறமை சித்திகளுடன் 06 பாடங்கயில் சித்திப் பெற்றிருக்க வேண்டும்.

**தொழிற் தகைமைகள்**

- தனியார் / வாடகை வாகனங்கள் மற்றும் 24 டன்களுக்கும் குறைவான திறன் கொண்ட ஸ்டேஷன் வேகன்களை ஓட்டுவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணைக்குழு நாயகத்தினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகன ஓட்டுநர் உரிமத்தை வைத்திருத்தல்.

  (ஆட்சேர்ப்பு திகதியில் 3 ஆண்டுகளுக்கு முன்பு குறைந்தபட்சம் C மற்றும் C1 வாகனப் பிரிவில் உரிமம் அல்லது புதிய உரிமத்தின்படி B பிரிவில் ஓட்டுநர் உரிமத்தை வைத்திருக்க வேண்டும்)

- நெடுஞ்சாலை வீதி சமிஞ்சை குறியீடு தொடர்பாக நன்கு அறிந்திருத்தல்.

**அனுபவம் :**

- வாகன ஓட்டுனராக 03 வருட பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். (அனுபவம் சான்றிதழ் மூலம் நிருபிக்கப்பட வேண்டும்)

**(2) வயது 18 - 45 வயதிற்குள் இருத்தல் வேண்டும்.**

**(3) நியமனத்தின் தன்மை :-**

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மற்றும் செயன்முறைத் தேர்வு மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும், மேலும் நேர்முகப்பரீட்சை மற்றும் செயன்முறைத் தேர்வு ஆகிய இரண்டிலும் பெற்றுக்கொண்ட மதிப்பெண்களின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

**(4) சம்பளம் :- TRC 10.1 - ரூ.40,800/- (10x480) - (10x680) - (10x1020) - (10x1360) - ரூ.76,200/-**

**(5) விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி - 2023.08.10**

**(6) பொது நிபந்தனைகள் :**

- இந்நியமனம் நிரந்தரமானது மற்றும் 03 வருட நன்னடத்தை காலத்திற்கு உட்பட்டது.
- விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி திகதிக்குள் தேவையான தகுதிகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்கள் கணக்கில் கருதப்பட மாட்டார்கள்.
- எந்த வகையிலும் செல்வாக்கு செலுத்துவது பதவிக்கு தேர்வுக்கு தகுதியற்றதாக கருதப்படும்.
- தேர்வு செய்யப்பட வேண்டிய பதவிகளின் எண்ணிக்கை, தேர்வுக்கான காலதாமதம் மற்றும் நிராகரிப்பு குறித்த தீர்மானங்களை மேற்கொள்ளும் உரிமை இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிற்கு (TRCSL) உண்டு.
- இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவானது ஒரு ஒழுங்குமுறை ஆணைக்குழு என்பதன் மற்றும் ஆணைக்குழுவின் பதவிகளுக்கு தேர்வு செய்யும் எந்தவொரு நபரையும் அவன் / அவள் துணை அல்லது குடும்ப உறுப்பினரை ஆணைக்குழுவின் ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒரு நிறுவனத்தில் நியமிக்க நேரடியாக / மறைமுகமாக ஆதரிக்க / ஊக்குவிக்க கூடாது.

**(7) விண்ணப்பிக்கும் முறை :**

அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள், விண்ணப்பங்களை, கல்வி / தொழில்முறைத் தகுதிகள் மற்றும் அனுபவம் தொடர்பான உரிய சான்றிதழ்களின் சான்றொப்பமிடப்பட்ட நகல்களுடன் பின்வரும் படிவத்தில் விண்ணப்பங்களைப் பெறுவதற்கான கடைசி நாளில் கீழே உள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரர் ஏற்கனவே பொதுச் சேவையில் இருந்தால், அந்த பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் விடுவிக்க எந்த தடையும் இல்லை என்று சம்பந்தப்பட்ட நிறுவன தலைவரின் பரிந்துரையுடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய உறையின் மேல் இடது மூலையில் **"ஓட்டுனர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2023"** எனக் குறிக்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களை **www.trc.gov.lk** இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஓட்டுனர் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பப்படிவம் - 2023**

- முழுப்பெயர் (தமிழ் / சிங்களம்) :
- முழுப்பெயர் (ஆங்கிலம்) :
- முதல் எழுத்துடன் பெயர் (ஆங்கிலம்) :
- விலாசம் :
- பால் :
- தற்போது அரச பணியாளராயின் : தற்போதைய பதவிநிலை பணியாற்றும் நிறுவனம்
- பிறந்த திகதி :
- விண்ணப்ப முடிவுத்திகதிக்கு வயது : ஆண்டு ............. மாதம்: …............ நாட்கள்:….......
- தொலைபேசி இலக்கம் : கைத்தொலைபேசி இல்லம் :
- தே.அ.அட்டை / வாகன ஓட்டுனர் பத்திர இல :
- கல்வித்தகைமைகள் :
- தொழிற்தகைமைகள் :
- முன் அனுபவம் :
- இணைக்கப்பட்ட சான்றிதழ் பிரதிகள் 1.
  2.
  3.
  4.

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து தகவல்களும் உண்மையானது எனவும் உறுதியளிக்கின்றேன்.

திகதி : ................/ .........../ ..............   விண்ணப்பதாரின் கையொப்பம் : ....................................

- அதிகாரி பணிபுரியும் நிறுவனத் தலைவரின் பரிந்துரை : மேற்குறிப்பிட்ட பதவிக்கு தேர்வு செய்யப்பட்டால், அதிகாரியை விடுவிக்க எந்தத் தடையும் இல்லை என பரிந்துரைக்கிறேன்.

திகதி : ................/ .........../ ..............   விண்ணப்பதாரின் கையொப்பம் : ....................................

பெயர் :

பதவி :

**வேலை பார்பணிப்பாளர் நாயகம்,**

**இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு**

**இல: 276, எல்விட்டிகல மாவத்தை,**

**கொழும்பு 08,**